# தருமபுரி மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பறவைக் காய்ச்சல் சம்பந்தமான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

புதுடெல்லி மற்றும் கேரள மாநிலம் ஆலப்புழா பகுதிகளில் பறவைக் காய்ச்சல் நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளதை அடுத்து மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தற்போது தமிழகத்தில் பறவைக்காய்ச்சல் நோய் இல்லை. தருமபுரி மாவட்டதில் உள்ள கோழிப்பண்ணைகள் மற்றும் நாட்டுபுற கோழிகளில் இந்நோய்க்கான அறிகுறிகள் ஏதுமில்லை. மேலும் இப்பணிக்காக கால்நடை பராமரிப்புத்துறை மூலம் 24 அதிவிரைவுப் படைகள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் 24 மணி நேரமும் கோழிப்பண்ணைகளை கண்காணித்து வருகிறார்கள். இக்குழுக்களின் நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் தலைமையில் இருவாரத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

வர்த்தக ரீதியான கோழிப்பண்ணைகள் புறக்கடை கோழி வளர்ப்புப் பகுதிகள் மற்றும் கோழி இறைச்சிக் கூடங்கள் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு பறவைக்காய்ச்சல் நோய் அறிகுறிகள் தென்படுகிறதா என களஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோழி மற்றும் கோழி இனப் பொருட்கள் போக்குவரத்தினை அவரவர் பகுதிகளில் விழிப்புணர்வுடன் கண்காணிக்கவும், பறவைகள் சரணாலயம், வனங்கள் மற்றும் நீர் இருப்புப் பகுதிகளில் ஏதேனும் அசாதாரணமான இறப்புகள் ஏற்பட்டால் உடனே மாவட்ட நிர்வாகத்திற்கும், கால்நடை பராமரிப்புத்துறைக்கும் தெரிவிக்கவும், கோழிப்பண்ணைகளில் கோழிப்பண்ணையாளர்களுக்கு உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் எனவும், பிரதி மாதம் பறவைக்காய்ச்சல் கடும் கண்காணிப்பு பணிக்காக இரத்த மாதிரிகள் மற்றும் கோழி எச்ச மாதிரிகள் சேகரிக்கப்பட்டு கோழியின நோய் ஆய்வகம் ஆண்டலூர் கேட், நாமக்கல் அனுப்பி கண்காணிக்கவும், மாவட்டத்தில் நடத்தப்படும் அனைத்து முகாம்கள் மற்றும் பயிற்சிகளில் பறவைக்காய்ச்சல் நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளவும், நச்சுக்கொல்லி, கிருமி நாசினி மருந்து மற்றும்

உபகரணங்கள் தேவையான அளவு இருப்பு வைத்துக்கொள்ள கால்நடை பராமரிப்புத்துறையினருக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார். பறவைக்காய்ச்சல் நோய் குறித்து இலவச தொலைபேசி எண்களுக்கு 1077/8903891077/1800 425 7016 தகவல் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு. எம். ஸ்ரீனிவாசன், உதவி இயக்குநர்கள் மரு. இளங்கோ, மரு. வில்வம், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் மரு. எஸ். பாபு மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.